(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 33.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 திசெம்பர் 10, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

29/ '15

1\. கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சப்பிரகமுவ மாகாணத்தில், மிகவும் முக்கியமான பௌத்த வழிபாட்டுத் தலமாகிய கூரகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கூரகல புனிதத் தலத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அகழ்வுகளின் மூலம் கிடைத்த தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கூரகல புனிதத் தலத்தின் பௌத்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வுகளை இடையறாமல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி எப்போதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

178/ '15

2\. கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. எம்.எம்.ஏ. நிப்ரான் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் வசித்த திக்வெல்ல, யோனகபுர, வெதகெதர, 264/1 ஆம் இலக்க வீடு மலைசார்ந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது என்பதையும்;

(ii) 2012.09.22ஆம் திகதி பெய்த மழையின் காரணமாக உடைந்து சேதமான இந்த வீட்டில் எஞ்சியிருந்த சமையலறையும் 2015.09.02 ஆம் திகதி அதிகாலை 1.45 மணியளவில் அருகாமையில் இருந்த மண்மேடு சரிவுக்குள்ளானமையால் முழுமையாக அழிவடைந்துள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பில் பிரதேசத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சிறு பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் ஒரு குடும்பமாக வாழ்வதற்கு இருந்த மேற்படி வீடு முழுமையாக உடைந்து சேதமடைந்ததன் மூலமும் நிரந்தர வாழ்வாதாரம் இன்மையாலும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ள திரு. நிப்ரானுக்கு மேற்படி வீட்டை கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

184/ ’15

3.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) LTTE அமைப்பின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்தினால் தவறாளிகளாக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற LTTE அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) LTTE அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான குற்றச்செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு 2015.10.30 ஆம் திகதி வரை சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கைதிகளின் பெயர்கள், இவர்களுக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் சிறைத் தண்டனைக் காலம் யாவையென்பதையும்;

(ii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள LTTE சந்தேக நபர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் சிறையிலிடப்பட்ட திகதி யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள LTTE சந்தேக நபர்களில் இதுவரை குற்றச்சாட்டுக்கள் கோப்பிடப்படாத சந்தேக நபர்கள் இருப்பார்களாயின் இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் கைது செய்யப்பட்ட திகதி யாவையென்பதையும்;

(iv) மேற்படி (ஆ) (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிடையே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் பயங்கரவாத அல்லது வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ள சந்தேக நபர்கள் இருப்பார்களாயின் இவர்களது பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

188/ ’15

4.

கௌரவ ஈ. சரவணபவன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 7 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் சேவையாற்றிய பல பாடசாலை அதிபர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) யாழ் குடாநாட்டில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) யாழ் குடாநாட்டில் இடமாற்றம் வழங்கப்பட்டிராத பாடசாலை அதிபர்கள் உள்ளனரா;

(iii) ஆமெனில், அவர்களுக்கு இடமாற்றம் கிடைக்காமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

240/ '15

5.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடர் நிறையளிக்கப்பட்ட முறைக்கமைய இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமான தன்மை பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) சர்வதேச நாணய நிதியத்தின் இடர் நேர்வு அடிப்படையிலான நிறையேற்றலின் புதிய முறையின் பயன்பாட்டின் போது X, STD, OPL அத்துடன் M2 மாறிகளின் தரவுகளுக்கமைய 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், மிதக்கும் செலாவணி வீத முறையின் கீழ் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் கடந்த 9 மாத காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்திய பிரதானமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

57/ '15

6.

கௌரவ புத்திக பத்திரண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.05.30 ஆந் திகதியளவில் அரச நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்த பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகை அறவிடப்படவேண்டிய அரச நிறுவனங்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(iii) அப்பணத்தொகையை அறவிட கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015.05.30 ஆந் திகதியளவில் கூட்டுத்தாபனத்தினால் கடன், வட்டி மற்றும் வேறு கொடுப்பனவுகளாக செலுத்தவேண்டியிருந்த பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகையைச் செலுத்தவேண்டிய நிறுவனங்கள் மற்றும் செலுத்தவேண்டிய பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(iii) அப்பணத்தொகைகளைச் செலுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் எண்ணெய் விலையை அதிகரிக்க நேரிடுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த 05 வருடங்களில் கூட்டுத்தாபனம் அடைந்த தேறிய நட்டம் வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) கூட்டுத்தாபனம் நட்டமடைவதில் தாக்கமேற்படுத்திய காரணங்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அக்காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ நலின் பண்டாற ஜயமஹ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட பதினாறாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 09).

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் கட்டார் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2012 மே 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜனவரி 03 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜூன் 10 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 4),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் எகிப்து அராபியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 மாச்சு 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 5),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைத் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 நவெம்பர் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 6),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 7),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1986 மாச்சு 13 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 8),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மலேசியா அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1982 ஏப்பிரல் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 9),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 10),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜூலை 25 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 11),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2011 மாச்சு 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 12),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1997 ஜனவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது சிபாரிசின் பேரில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015.06.08 ஆம் திகதிய 1918/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்திப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---